தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு
# 2011

# தமிழ்மொழி

## வகுப்புநிலை 4

சுட்டெண்:

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழ் மொழியில் உள்ள முதல் எழுத்துகள்

   _____________________________.

   ( இருநூற்றுப் பதினாறு, முப்பது, பதினெட்டு )

2. நிலத்திலும் நீரிலும் வாழக்கூடிய உயிரிகள் ____________________

   ( நண்டு - இறால், பாம்பு - சுறா, ஆமை - முதலை )

3. மா __________________ வாழை என்பவற்றை முக்கனிகள் என்று அழைப்பர்.

   ( அப்பிள், தோடை, பலா )

4. கற்கக் கற்க ஊறுவது _____________________________.

   ( அறிவு, சினம், அன்பு )

5. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் __________________________.

   ( முகம், புறங்கை, உள்ளங்கை )

6. தமிழில் உள்ள முதன்மையான இலக்கண நூல்

   __________________________.

   ( தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள் )

7. ____________________ கொண்டாட்டங்களிலே ஆடிப்பிறப்பும் ஒன்று.

   ( போர்த்துக்கேயரின், ஆரியரின், தமிழரின் )

tedc.org.uk

8. கிளித்தட்டு விளையாட்டில் முன்புறமிருந்து இறங்கும் கன்னையரை ______________________ என்பர்.

( பழம், காய், கிளி )

9. காற்று என்பதை ______________________ என்றும் சொல்லலாம்.

( வளி, வலி, வழி )

10. இனிய நண்பனை ______________________ அறியலாம்.

( விழாவில், இடுக்கணில், மகிழ்வில் )

11. தோற்கருவிகளை ______________________ என்று அழைப்பர்.

( தண்ணுமை, முழவுகள், படைமுரசு )

12. அறிவுடையார் எல்லாம் உடையார் ______________________ என்உடைய ரேனும் இலர்.

( அறிவிலார், அறிவுடையார், அன்பிலார் )

13. அகிலன் நாளை எங்கள் வீட்டிற்கு ______________________.

( வந்தான், வருவான், வருகிறான் )

14. நான் விளையாடிக் கொண்டிருந்தேன் ______________________ மழை பெய்தது.

( எப்போது, இப்போது, அப்போது )

15. ஒருவருக்கு நன்மை செய்யும்போது ______________________ கருதிச் செய்யக்கூடாது.

( பயன், தீமை, மகிழ்ச்சி )

tedc.org.uk

16. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு ______________________.

( முயல், கரடி, சிங்கம் )

17. நிலநடுக்கத்தினால் கட்டிடங்கள் ______________________ என ஆடின.

( கடகட, கிடுகிடு, படபட )

18. கவிதை + போட்டி என்பதைப் புணர்த்தினால்

______________________.

( கவிதைப்போட்டி, கவிதைபோட்டி, கவிதைய்ப்போட்டி )

19. நாம் தெளிவாக ஆராய்ந்து ______________________ கற்க வேண்டும்.

( தேவையானதைக், தேவையற்றதைக், கெட்டதைக் )

tedc.org.uk

20. அறம் தவறாது காக்கும் மன்னனை மக்கள் ______________________ எனப் போற்றுவர்.

( இறைவன், மன்னன், பாடகன் )

21. விளையாட்டுகள் வீரத்தையும் ஆற்றல்களையும் ______________________.

( குறைக்கும், மறைக்கும், வளர்க்கும் )

22. ______________________ ஆலம் விதையைப் போட்டுச் சென்றது.

( பருந்து, புறா, காகம் )

23. உடுக்கை என்ற சொல் குறிப்பது ______________________

( இசைக்கருவி, ஆடை, நகை )

24. மகாவலி ஆறு ____________________க் கடலில் வந்து கலக்கிறது.

( ஆனையிறவு, திருமலை, கொழும்பு )

25. மருந்தாகப் பயன்படும் சரக்குகளில் ஒன்று ____________________

( வேர்க்கொம்பு, ஏலம், கறுவா )

26. தாளத்திற்கு ஏற்ப கால் பெயர்த்து ஆடும் ஆட்டம்

__________________________________.

( துடுப்பாட்டம், கோலாட்டம், நடமாட்டம் )

27. உடற்பயிற்சி என்பதைப் பிரித்து எழுதினால் ____________________

( உடற் + பயிற்சி, உடல் + பயிற்சி, உடற்ப் + பயிற்சி )

tedc.org.uk

28. முயற்சி உடையார் __________________________________ அடையார்.

( இகழ்ச்சி, உயர்ச்சி, புகழ்ச்சி )

29. பழந்தமிழ் நூல்களான ஏட்டுச்சுவடிகளைப் புதுப்பித்து அச்சேற்றியவர் ____________________________.

( சோமசுந்தரப்புலவர், இளங்கோவடிகள், தாமோதரம்பிள்ளை )

30. பறவைகள் ____________________________ பறந்தன.

( வாணத்தில், வானத்தில், வாநத்தில் )

(புள்ளிகள் 30)

## 2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில், கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| நறநற | ஓடஓட | படிக்கப்படிக்க |
| விடியவிடிய | சாரிசாரியாக | |

1. சேந்தன் தேர்விற்காக ______________________ ப் படித்தான்.

2. நண்பன் மீது கொண்ட சினத்தால் எழிலன் பற்களை ______________________ எனக் கடித்தான்.

3. உணவைக் கண்ட எறும்புகள் ______________________ ஊர்ந்து சென்றன.

4. நாய் பூனையை ______________________ விரட்டியது.

5. நல்ல நூல்களைப் ______________________ அறிவு பெருகும்.

tedc.org.uk

(புள்ளிகள் 05)

## 3) மாறியிருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.

1. இருக்கும் / அலகு / கிளியின் / சிவப்பாக

_______________________________________________.

2. என்றும் / போர்முரசைப் / படைமுரசு / அழைப்பர்

_______________________________________________.

3. கூறுகிறது / திருக்குறள் / நட்பைப்பற்றிக் / வாழ்க்கை வழிகாட்டியான

_______________________________________________.

tedc.org.uk

4. மன்னன் / ஒரு / இராவணன் / தமிழ் / சிறந்த

_______________________________________________.

5. வேண்டும் / கற்க / பிழையில்லாமல் / கற்பதைப்

_______________________________________________.

(புள்ளிகள் 05)

## 4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.

1. மேகம் கறுக்கக் கண்டால் மயில் தோகை விரித்து

   ______________________________.

2. பதறாத காரியம்

   ______________________________.

3. பலசரக்குகள் உடலுக்கு உறுதியைத்

   ______________________________.

4. இளங்கோவடிகளினால் சிலப்பதிகாரம்

   ______________________________.

5. சென்ற வாரம் நடந்த பேச்சுப் போட்டியில் எனது அக்கா

   நன்றாகப் ______________________________.

tedc.org.lk

(புள்ளிகள் 10)

## 5) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| காய் | பழம் | கிளி | மரபு | வெற்றி |
|---|---|---|---|---|

கிளித்தட்டு, கிட்டிப்புள், சிலம்பம் போன்றவை எமது ______________________ விளையாட்டுகளாகும். கிளித்தட்டு விளையாடுவோர் இரு கன்னைகளாகப் பிரிந்து நிற்பர். கன்னையின் தலைவரைக் ______________________ என்று அழைப்பர். இந்த விளையாட்டில் முன்புறம் இருந்து இறங்கும் கன்னையர் ______________________ என்று அழைக்கப்படுவர். அவர்கள் இறுதித் தட்டைத் தாண்டியதும் பழம் ஆவர். ஒரு தட்டுக்குள் காயுடன் ______________________ கலந்தால் அக்கன்னையர் ஆட்டம் இழப்பர். இறங்கிய கன்னையர் தொடக்கக் கோட்டைப் பழமாகத் தாண்டினால் அவர்கள் ______________________ பெறுவர்

tedc.org.uk

(புள்ளிகள் 10)

## 6) தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

எறும்புகள் சுறுசுறுப்பு மிக்கவை. அவை வெப்பமான நாடுகளில் அதிகமாக வாழ்கின்றன. அவற்றில் பல இனங்கள் உண்டு. அவை கூட்டம் கூட்டமாக வாழும். எறும்புகள் சாரிசாரியாக ஊர்ந்து செல்லும். எறும்புகளுக்கு பொருட்களை மணந்து அறிந்து கொள்ளும் சக்தி உண்டு. எறும்புகள் மழைகாலத்தில் தமக்குத் தேவையான உணவைச் சேமித்து வைக்கும். எறும்புகளிடம் முயற்சி, ஒற்றுமை, சுறுசுறுப்பு ஆகிய பண்புகள் இருப்பதைக் காணலாம்.

1. எறும்புகள் எவ்வாறு பொருட்களை அறிந்து கொள்கின்றன?

   ________________________________________.

2. எறும்புகள் எவ்வாறு ஊர்ந்து செல்லும்?

   ________________________________________.

3. எக்காலத்தில் எறும்புகள் உணவைச் சேமித்து வைக்கும்?

   ________________________________________.

4. எறும்புகளிடம் காணப்படும் இரண்டு பண்புகளைக் கூறுக?

   ________________________________________.

5. எத்தகைய நாடுகளில் எறும்புகள் அதிகமாக வாழும்?

   ________________________________________.

tedc.org.lk

(புள்ளிகள் 10)

## 7) கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. தமிழருடைய கொண்டாட்டங்கள் எவை?

___

2. ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரைக்கும் காத்திருப்பது எது?

___

3. இராவணனது சிறப்பியல்புகளைக் கூறும் நூல் எது?

___

4. எல்லாளன் இலங்கையை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?

___

tedc.org.uk

5. 'முத்தமிழ்' என்று அழைக்கப்படுபவை எவை?

___

(புள்ளிகள் 10)

## 8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் எழுதுக.

1. வாத்து ______________________________

2. தொடருந்து ______________________________

3. மழை ______________________________

4. நாட்குறிப்பு ______________________________

5. பட்டம் ______________________________

(புள்ளிகள் 05)

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



(புள்ளிகள் 15)